பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் [illegible]

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 22 | 8 - 12 - 94 | வியாழக்கிழமை | ஓசை 293

## பாவனைக்குதவாத ரின்பால் தமிழீழ சுகாதாரபிரிவினரால் பறிமுதல்

யாழ். நகரிலுள்ள தீவக பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றில் காலாவதியான ரின்பால் விற்பனை செய்யப்பட்டு வந்ததை தமிழீழ சுகாதாரப் பகுதியினர் தமது திடீர்ப் பரிசோதனையில் கண்டுபிடித்துள்ளனர் அக்கிளையில் விற்பனைக்காக இருந்த ஏனைய கட்டிப்பால் தொகுதியும் மேல்விசாரணைக்காக பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது பாவனைத் திகதியை அவதானித்து வாங்குமாறு தமிழீழ சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேவேளை யாழ்.நகரின் பிரதான சந்தியொன்றில் அப்பிள் பழங்களை நிலத்தில் சுகாதாரமற்ற முறையில் உரப்பையின் மேல் வைத்து விற்பனை செய்த நடமாடும் வியாபாரி ஒருவரும் கண்டுபிடிக்கப்பட்டு தமிழீழ சுகாதார சேவை உணவுப் பரிசோதகர்களின் திடீர்ப் பரிசோ

[6ஆம் பக்கம் பார்க்க]

# பேச்சுவார்த்தைக்கு முன்னர் போர்நிறுத்தம்; விடுதலைப் புலிகளுக்கு அரசு யோசனை

## வவுனியா விமானத்தள விஸ்தரிப்பு; கத்தோலிக்க மக்கள் கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா விமானப்படை முகாம் விஸ்தரிப்பிற்காக கத்தோலிக்க மக்களின் சேமக்காலை, கன்னியர்மட விளையாட்டு மைதானம் என்பவற்றை சுவீகரிக்க கத்தோலிக்க திருச்சபை மீண்டும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் அமைந்துள்ள தச்சன்குளம் விமானப் படை முகாமை விஸ்தரிப்பதற்காக கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த மக்களின் சேமக்காலை அமைந்துள்ள காணியையும் வவுனியா கன்னியர்மட விளையாட்டு மைதான காணியையும் அரசாங்கம் சுவீகரிக்க எடுத்துக் கொண்ட முயற்சிக்கு வடகிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர்கள் அரசுக்கு கடும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர்.

முன்பு ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில் இவற்றை சுவீகரிக்க அரசு முயற்சி செய்திருந்த போதும் ஆயர்களின் கடும் எதிர்ப்பினால் அப்போது அம்முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

இதை மீண்டும் தற்போ

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு தமிழ் இளைஞர்களை திருக்கோவிலில் காணவில்லை

[மட்டக்களப்பு]

திருக்கோவிலில் படம்பார்க்கச் சென்ற ஆறு தமிழ் இளைஞர்கள் திடீரென காணாமல் போயுள்ளனர்.

இப் பகுதியில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புக்களிலும், தேடுதல்களிலும் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

## சி. ஐ. டி. பொலிசாரே புல்மோட்டையில் பலி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் கடந்த முதலாம் திகதி சி. ஐ. டி. ... பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இன்னொரு சி. ஐ. டி.

## விசேடமாணவர் அரங்கு

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையை முன்னிட்டு இன்று விசேட மாணவர் அரங்கு உள்ளே வெளிவருகிறது. இதில் வரலாறும் சமூகக் கல்வியும் இடம்பெறுகிறது.

## விரைவில் போர் ஓய்வு அறிவிப்பு வெளிவரலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குமுன் 'தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு' ஒன்றைச் செய்துகொள்வதற்கான யோசனையை அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்குத் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து விரைவில் தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்று ஏற்படலாம் எனவும் நம்பப்படுகின்றது.

மேலும் இதுகுறித்து அறியவருவதாவது: சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்றை அரசாங்கம் செய்து கொள்ள விரும்புவதாகவும், இவ் உடன்பாட்டை ஓரிரு வாரங்களுக்குள் அமுல்படுத்த புலிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்தோடு தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டபின்னர் நடக்கும் பேச்சுவார்த்தையின் போது போர் நிறுத்தத்தில் கடைப்பிடிக்கப்படும் வழி முறைகள் பற்றி விரிவாக ஆராயப்படும் எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம், இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள நேற்றைய கொழும்புத் தமிழ்த் தினசரியொன்று போர் நிறுத்தம் மற்றும் பாதை திறப்பு தொடர்பாக அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இரண்டாவது கடிதமொன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்திருப்பதாக நம்பகரமாக தெரிய வருவதாக தகவல் வெளியிட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை சுமுகமாக தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஏதுவாக மோதல்களை நிறுத்துவதற்கான சாத்தியப்பாடுகள்- வடபகுதி மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கு பாதையை திறப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய வேண்டியதன் அவசியம் குறித்து அரசாங்கத்தின் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம் இன்னும் இரண்டு மூன்று தினங்களில் அரசாங்கம் யுத்தநிறுத்தமொன்றை அறிவிக்கலாம். விடுதலைப் புலிகளின் சாதகமான நிலைப்பாடு கிடைக்குமா

[6ஆம் பக்கம் பார்க்க]

## யுத்த நிறுத்தத்திற்கு சந்திரிகா தயாராம்

### வெரித்தாஸ் வானொலி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தமொன்றைக் கடைப் பிடிப்பதற்கு தயார் என அறிவித்துள்ளார். இதனையடுத்து சில காலமாக தடைப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கும் வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதாக கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் கடந்த முதலாம் திகதி சி.ஐ.டி. பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இன்னொரு சி.ஐ.டி. பொலிஸ் காயமடைந்த நிலையில் தப்பியோடி விட்டார்.

கக கல்வியும் இடம்பெறுகிறது.

தற்கு தயார் என அறிவித்துள்ளார். இதனையடுத்து சில

# பொலிஸ் உயர் மட்டத்தில் 45 பேர் இடமாற்றம்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டன்கள், பொலிஸ் சுப்ரின்டன்கள், உதவிப் பொலிஸ் சுப்ரின்டன்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட 45 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டன்ட் ரி.கே. ஜெயராஜன், யாழ்ப்பாணத்திலிருந்து பொலிஸ் தலைமையகத்திற்கும், சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டன்ட் ஏ.ஈ. சர்வானந்தா நுகேகொடவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதி - ஆயர் சந்திப்பு; இறுதி நேரத்தில் ரத்தானது

(யாழ்ப்பாணம்)

சந்திரிகாவைச் சந்திப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதிநேரத்தில் அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு நிறைவேறவில்லை என யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இறுதி நேரத்தில் முக்கிய வேலை இருந்ததனால் சந்திப்பு இரத்தானது என்றும்

[6ஆம் பக்கம் பார்க்க]

# புலிகள்-அரசுயுத்தநிறுத்தம் தமிழ்குழுக்களை பாதிக்கும்

[கொழும்பு]

-- சித்தார்த்தன்

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட்டால் அது ஏனைய தமிழ்க் குழுக்களுக்கு பாதகமாக அமையலாம். இவ்வாறு புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்;

யுத்தநிறுத்தத்தினால் எந்த ஒரு பெறுபேறும் ஏற்படப் போவதில்லை. எனவே யுத்தநிறுத்தத்தை தான் எதிர்ப்பதாகவும் அவர் கூறியுள்ளதாக சந்தேசிய தெரிவித்துள்ளது-

# விரைவில் அமைதி திரும்பும் நரசிம்மராவ் நம்பிக்கை

[புதுடில்லி]

இலங்கையில் அமைதி நிலை விரைவில் திரும்பும் எனத் தான் நம்புவதாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்-

நேற்று புதுடில்லியில் இந்தியப் பிரதமரை சந்தித்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் அவர் இவ்வாறு தெரிவித்ததாக தூரதர்ஷன் நேற்று தெரிவித்தது-

இந்தியவெளியுறவுத் துறை இணையமைச்சர் ஆர்-எல்-பாட்டியாவையும் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இதேவேளை லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான சிறிலங்காதூதுக் குழுவுக்கும்-

[6ஆம் பக்கம் பார்க்க]

# யுத்தநிறுத்தம் குறித்து அரசின் அதிகாரபூர்வ அறிவிப்பில்லை

[கொழும்பு]

யுத்தநிறுத்தம் தொடர்பாக செய்தியாளர்களின் வாயிலாக தகவல்கள் வெளியாகியிருக்கிறதே ஒழிய இதனை அரசாங்கமோ இராணுவமோ இன்னும் உத்தியோகபூர்வமாக தெரிவிக்கவில்லை இவ்வாறு ஏ.எவ்.பி. செய்தியாளரான அமால் ஜெயசிங்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்தம் பற்றிய செய்திகள்-செய்தியாளர்களின் தகவல்களை அடிப்படையாக வைத்தே வெளிவருகின்றன எனவும், இராணுவத்தினருக்குக்கூட இதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் யுத்தநிறுத்த அறிவிப்பை உடனடியாக வெளியிடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை பற்றியும் அதன் தாக்கங்களைப் பற்றியும் சிந்திப்பதால் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படாமல் இருக்கலாம்.

இதேவேளை விடுதலைப் புலிகளோடு இரகசியமான முறையில் அரசாங்கம் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கலாம் எனவும் அவர் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப்பாதை திறந்துவிட இராணுவத் தளபதி மறுப்பு

கொழும்பிற்கு வருகைதரும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை சந்திக்கச் செல்லும் யாழ். மக்களுக்காக பூநகரி பாதையை திறந்து விட முடியாது என இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ். மறைமாவட்டஆயர் அருட் திரு. தோமஸ் சௌந்தர நாயகத்தின் கேள்விக்கு மேற்கண்டவாறு இராணுவத் தளபதி பதில் அளித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் வெளிநாட்டு அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் இராணுவத் தளபதியுடன் பொலிஸ் மா அதிபர் பிராங்டிசில்வா, தொழிற்துறை அமைச்சர் சீ.வீ. குணரட்ன, மேயர் கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். ஆயருடன் திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும்மேலும்பல ஆயர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் யாழ்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## குடும்ப அட்டை திருத்தம்

பொதுமக்கள் குடும்ப அட்டை பெற்றுக் கொள்ளும் வசதிகருதி குடும்ப பதிவு அட்டை திருத்தம் செய்வதற்கான கால எல்லை மறுஅறிவித்தல் வரை தளர்த்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

# சிறிலங்கா அரசியற் தலைவர்களுக்கு இந்திய சிறப்பு பாதுகாப்புக் குழு

## வெடிகுண்டுத் தாக்குதலிலிருந்து பாதுகாக்க ஏற்பாடு

சிறிலங்கா தலைவர்கள் வெடிகுண்டுத்தாக்குதல்களில் கொல்லப்படுவதிலிருந்து பாதுகாப்பு வழங்கும் பொருட்டு சிறப்பு பாதுகாப்பு குழுவொன்றை இலங்கைக்கு வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

புதுடில்லிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து இம் முடிவுமேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இலங்கைத் தலைவர்கள் வெடிகுண்டுகள் மூலம் கொல்லப்படுவது தொடர்பாக தமிழ்ப் போராளிகள்மீதே சந்தேகம் நிலவுகிறது எனவும் இதிலிருந்து பாதுகாப்பு வழங்க இந்தியா முன்வரவேண்டும் எனவும் இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

மேலும் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கு இந்தியாவில் பாதுகாப்பு வழங்கப்படுவது தொடர்பாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

# யுத்தநிறுத்தம்; சமஷ்டித் திட்டம் கொழும்பில் தகவல் திரட்டல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருதல், பிராந்திய ஆட்சிமுறையிலான சமஷ்டித் திட்டம் ஆகியன தொடர்பாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருத்துக்கள் பெறப்பட்டு வரப்படுவதாக அரசாங்கதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியுடனும், தமிழ் அரசியற் கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரசின் கருத்தும் பெறப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

## புகைபபடங்கள்

வட இலங்கை நுண் கலை என்ற சான்றிதழ் வழங்கல் தொடர்பான புகைப்படங்களை திங்கள், புதன், வெள்ளிகளில் பெற்றுக்கொள்ளவும். கலையகம் இல. 6, பென்ரிக் கோஸ் லேன் கண்டி வீதி கச்சேரியடி, (10318)

## " நீமியா உரம் "

நெற்பயிரில் பூச்சிகள் தாக்காமல் இருக்கவும், அதிக விளைச்சலுக்கும் சிறந்த பயனைத்தருவது இயற்கை உரமான '' நீமியா உரம் ''. அராலியில் ' சிவ ஐங்கரன்' கடையிலும் நீமியா உரம் விற்பனைக்குள்ளது. பாவித்துப் பயன் பெறுங்கள். ''மில்க் வைற்'' (சி-10854)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம்பிரதான வீதிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் அணித்தாய் 31, கதீட்ரல் வீதியில் அமைந்துள்ள வீடும் ¾ பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு 31, கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணம். (10323)

## புதிய வகுப்புகள்

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் ஆரம்பமாயுள்ளன. கணிதம் சுந்தரம், விஞ்ஞானம் சிவா, தமிழ் வேலாயுதபிள்ளை, ஆங்கிலம் நடராசா, சமூகக் கல்வி சிவராசா ஆண்டு 3,4,5, தமிழ், கணிதம் அம்பிகைபாகன் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10325)

## புலமைப் பரிசில் BRIGHT இன் புத்தகங்கள்

புலமைப்பரிசில் 5-ம் ஆண்டு கணிதம் ரூபா 60, தமிழ் ரூபா 50, கட்டுரை மஞ்சரி ரூபா 50, கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, தனலட்சுமி புத்தகசாலை, நாயகபாலன் புத்தகசாலை. சிவம் மெடிக்கல் புத்தகசாலை, மொடேண் புத்தகசாலை, ஆசீர்வாதம் புத்தகசாலை. (10308)

## தமிழில் சுற்றுநிருபம்

(நல்லூர்)

கல்வி,உயர்கல்வி சம்பந்தப்பட்ட சுற்று நிருபங்கள் இனி மேல் தமிழிலும் அனுப்பப்படும். இதற்கான பணிப்புரையைக் கல்வி,உயர்கல்வி அமைச்சர் றிச்சட்பத்திரான வழங்கி

## வரலாறும்

களும் வாங்கப்பட்டது இவனால் தவளசிறித் என்றதால் எழுதப்பட்டது மேலும் இவனால் பன்சியபணல் ஜாதகய என்ற நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது மேலும் தலதாசிறித், சிங்கள போதி வங் அநாக தவங்ச ஆகிய நூலும் இம்மன்னன் காலத்தில் எழுதப்பட்டது.

### 4. கம்பளை இராச்சியம்

கம்பளை இராச்சியத்தை 4-ம் புவனேகபாகு தலைநகராக்கினான் கம்பளை இராச்சியத்தின் காலம் இலங்கையின் பௌத்த வரலாற்றில் மிக முக்கியமானதாக உள்ளது இக்காலத்தில் வில்களுவதேரர் தேவன கலவரத்ன தேரர் சீல வங்கசதர்ம கீர்த்தி தேரர் ஜயபாகு தேவரகிததேரர், திசயசந்தேஷ , விமுக்கி சதுகிறய எழு அத்ததகலுவங்க சத்தர்மலங்காராய, நிசாய சதுகிறகய போன்றன இக்காலத்திற்குரிய சிங்கள நூல்களாகும்

### 5 கோட்டை இராச்சியம்

கி. பி1415இல் ஆட்சிக்கு வந்த6ம் பராக்கிரமபாகு மன்னனே இதனை தலைநகராக்கினான் இலங்கை முழுவதையும் ஒன்றுபடுத்தி ஒரு குடையின்கீழ் ஆண்ட இறுதிமன்னர் இவனே

இவன் காலத்தில் வன்னித் தலைவர்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தான். இவன் காலத்தில் பௌத்த மதம், சிங்கள இலக்கியங்களும் புத்துயிர் பெற்றன. இவன் காலத்தில் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த பல கல்விப்பீடங்கள் அபிவிருத்தி அடைந்தன.

(உ+ம்)

குருணாகல் பத்மாவதி பிரிவெனா தொட்டகமுவ விஜயபா பிரிவினா வீதாகம ஸ்ரீகனந்த பிரிவினா

இக்கல்வி பீடங்களில்,

தொட்டகமுவ ஹீராகுல தேரர். வீதாகம மைத்திலிய தேரர் காரகல வைரந்த தேரர் போன்ற புகழ்பெற்ற கலைஞர்கள்சேவையாற்றினர் இலக்கியத்துறையைப் பொறுத்த வரையில் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன,

(உ+ம்)

பறவி சந்தேஷய,சலலிஸினி கோகில சத்தேஷய,கிறா சந்தேஷய, குத்திலிய காவிய சேகர புதுகண அலங்காராய யோவட சங்கராவ, பரக்கும்பா, சிறித.

இவன் காலத்தில் இந்து மதம் வளர்ச்சி அடைந்திருந்தது கோட்டை ராச்சியத்தில் ஒரு சிவன் கோவிலும் கதிர் காமத்தில் ஒரு கோயிலும் இருந்ததாக கூறப்படுகிறது.

---

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா வழங்கி வரும்

வழமையான உணவுப் பார்சல்களை தடையின்றி, தாமதமின்றி முற்பகல் 11.45 மணி முதல் பிற்பகல் 3-30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

விலை விபரம்:

மரக்கறி = 30/=
இறைச்சி = 35/=
மீன் = 45/=

உணவுப் பொதிகளை உங்கள் சட்டைப் பைகளுக்கு ஏற்றவாறும் பொதி பண்ணித் தரப்படும்.
பதிவுகள் முன்கூட்டி ஏற்கப்படும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை,)
சுண்டுக்குளி

எமக்கு வேறு கிளைகளோ முகவர்களோ இல்லை.
புதுயுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா (சி-10865)

---

## தொழிநுட்பக் கல்லூரி அனுமதி - 1995 தேசிய கைப்பணிச் (தொழில்) சான்றிதழ் கற்கை நெறிகள்

மேற்படி விடயம் சம்பந்தமாக 1994-11-11ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு 10ஆம் ஆண்டைப் பூர்த்திசெய்தவர்களும் 1994-12-23ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், தொழிநுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்


---

# சிறுவர் அரங்கு

சிறுவர்களின் உளவிருத்தியை வளர்க்கும் நோக்குடன் ஈழநாதம் மக்கள் தினசரி, சிறுவர் அரங்கு எனும் புதிய பகுதியை விரைவில் தரவுள்ளது. மேற்படி அரங்கை அணிசெய்ய வாசகர்களிடமிருந்தும்,சிறுவர்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இப்பகுதியில் பொதுஅறிவு எனும்வகையில்புதிய தகவல்கள் பலவும் வெளிவரவிருக்கின்றன.

---

பருத்தித்துறை பிரதேசசபையின்
புலோலி நூலகர் திருச்செல்வத்தை
இலங்கை சைவமன்றமும் பாராட்டுகின்றது!



## திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம்

(புலோலி நூலகர்)

புலோலி பொதுசன நூலகரும், இலங்கைச் சைவ மன்ற உதவிச் செயலருமான திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் யாழ். பிராந்திய உள்ளூராட்சித்திணைக்களம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதம நூலகர் தலைமையில் நூலகர்கள் குழுவினால் நடத்திய ''சிறந்த நூலகர் தேர்வுப் போட்டியில்'' பாராட்டுப் பெறும் சிறந்த நூலகராகத் தெரிவாகி பாராட்டப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மக்களின் பேரன்பைப் பெற்றிருக்கும் திரு. திருச்செல்வத்தைப்பாராட்டுவதில் பெருமகிழ்வுறும் இலங்கைச் சைவ மன்றம் திரு. திருச்செல்வத்தின் தன்னலமற்ற மக்கள் சேவைகள் மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

திரு. திருச்செல்வம் நீடூழி வாழ்க!!

இலங்கை சைவமன்றம்

பருத்தித்துறை.
7. 12. 1994 (10324)

---

துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில்

யாழ்ப்பாணப்

---

# நினைவு கூருகின்றோம்...

## 08.12.1994

1984-ம் ஆண்டு இதேதினத்தில் யான்-ஓயாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **சீலன்** (ஆ. சத்தியநாதன்-முருங்கன் - மன்னார்)

1988ம் ஆண்டு மன்னார்-குஞ்சுக்குளம் பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**ரஞ்சன்** (மதியாபரணம் தனராஜ்-பெரியதம்பனை-மடுக்கோவில்)

1989-ம் ஆண்டு யாழ்-குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் 06 பேர்.

1991-ம் ஆண்டு அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அன்ராஜ் / இன்பராஜ்** (தங்கராசா ஜெயசீலன்-அத்திராள்குடியிருப்பு கரணவாய் கரவெட்டி - யாழ்)

1992-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் எமைப்பிரிந்த,

**இளங்குயில்** (ஜெகராணி காஸ்மீர்-மாதகல்-யாழ்)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இச்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10862)

---

## இதோ!அறிமுகப்படுத்துகிறோம்!

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா வழங்கும்

அன்டி - டன்ரி
நெய் புரியாணி (கோழி-ஆட்டிறைச்சி)
சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
பிற்பகல் 12. 00 மணி முதல் 3. 30மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்.

கோழி ரூபா 67. 50 மட்டுமே
ஆட்டிறைச்சி ரூபா 47. 50 மட்டுமே

ஏமாற்றத்தைத் தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

படும். இதற்கான பணிப்புரையைக் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சட்பத்திரான வழங்கி உள்ளார் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (17)

## உரம் கையிருப்பில்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்திற்கு தேவையான உரம் சகல கமத்தொழில் சேவைகள் திணைக்களத்திலும் கையிருப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமோனியா, ரி. டி. எம் ஆகிய உரவகைகள் இவ்வருட பெரும் போக நெற் செய்கைக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

பயிற்சி நெறிகளுக்கு 10ஆம் ஆண்டைப் பூர்த்திசெய்தவர்களும் 1994-12-23ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், தொழிநுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. மேசன் கற்கைநெறி-ஒருவருடம் (பகல்)
2. மரப்பொறியியக்க வல்லுநர் கற்கைநெறி- ஒரு வருடம் (பகல்)
3. நீர்க்குழாய் கற்கைநெறி ஒரு வருடம் (பகல்)
4. மின்னியலாளர் கற்கை நெறி-இரு வருடங்கள் (பகல்)
5. பொருத்து வல்லுநர் கற்கைநெறி இரு வருடங்கள் (பகல்)

க. ஜெயரத்தினம்.
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
1994-12-07

(சி10863)


# தாசன் அச்சகம்

## அழைக்கிறது

வியாபாரிகளே!

உங்கள் வாடிக்கையாளர்களுக்கு
புதுவருட அன்பளிப்பு செய்யுங்கள்!!
வருடம் முழுவதும் உங்களை
அவர்கள் முன் நிறுத்திவையுங்கள்
அழகிய நாட்காட்டி ஒன்று
பரிசளியுங்கள்
உங்களுக்கு இயைந்த அளவுகளில்
இரசனைக்கேற்ற வர்ணங்களில்
கவர்ச்சி நாட்காட்டிகள்!

இலக்கிய கர்த்தாக்களே!
அழகியல் பிரியர்களே!
உங்கள் ஆக்கங்களை
அழகிய புத்தக
வடிவங்களில்
காண விழைகிறீர்களா . . .
சிறிய பதிப்பு வேலை
களையும் அழகோடு
அச்சேற்றிக்கொள்ள
வேண்டுமா . . . .

## தாசன் அச்சகம்

(ஈழநாதம் காரியாலய அருகாமையில்)

மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(இ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து தொழில்நுட்பவியலாளர் தரம் 11 பிரிவு 'பி' பதவிக்கான விண்ணப்பங்கள் 1995. 01. 05ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 2890-10 x 55-7X65 - 3895/- மாதமொன்றுக்கு.

**தகைமைகள்:**

இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 05 திறமைச்சித்திகளுடன் க. பொ. த. (சாதாரணதர) தேர்வில் ஆறு பாடங்களில் சித்தி. திறமைச்சித்திகளுள் கணிதம், விஞ்ஞானம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

**வயது:**

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**

உளச்சார்பறித்தேர்வினை மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும்.

**குறிப்பு:**

தொழில் நுட்பவியலாளர் சேவையின் 'பி' பிரிவின் கீழான நியமனம் பெறுபவர் முதலில் ஒரு மாதத்திற்கு 2890/- மாதாந்த நிலையான சம்பளத்தில் மூன்றாண்டுகளுக்கு ''பயிலுனர் தொழில் நுட்பவியலாள''ராக நியமனம் பெறுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்[illegible] விப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23X10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்டகடித உறையையும்அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும்நிராகரிக்கப்படும்.

குறிப்பு: விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

பதிவாளர்,

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994 - 12 - 05

(சி-10860)


# ஜெசித்தாரா

## உங்கள் விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
[முன் ஒழுங்கை]
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

## ஜெசித்தாரா

(சி-10867)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பிதழும்



மலர்வு
22- 04- 1919

உதிர்வு
08- 11- 1994

### அமரர் கா. கிருஷ்ணர்

எனது தந்தையார் அமரர் கா. கிருஷ்ணர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அவரது ஈமக்கிரியைகளில் நேரில் கலந்தும், மலர் வளையங்கள் சாத்தியும் அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 08-12-94 வியாழனன்று தொண்டமானாற்றில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் குடும்பத்தினர் சார்பில்

கி. சிவப்பிரகாசம்
(மகன்)

செல்வச்சந்நிதி, கோவிலடி,
தொண்டமானாறு.

(10326)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதி

# எத்தகைய இடையூறு ஏற்படினும் சமாதான முயற்சி தொடரும்

## ஜனாதிபதி சந்திரிகா உறுதி தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான முயற்சி வெற்றி பெறும் என்றே நம்புகிறோம் தோல்வியை நாம் எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார் தம்மை கொழும்பில் சந்தித்துப் பேசிய தமிழ் குழு ஒன்றிடம் அவர் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

வடக்கு- கிழக்கு சமாதான முயற்சி வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு இந்த முயற்சியில் நாம் தோல்வியை எதிர் பார்க்கவில்லை எத்தகைய இடையூறுகள் ஏற்படினும் சமாதான முயற்சிகளை நிறுத்தமாட்டோம். தமிழ் மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர். முழு நாடும் ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் வகையிலேயே எனக்கு ஆணையிட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி சந்திரிகா அப்போது குறிப்பிட்டார்

## வத்தளையில் கைது

காமினி திசாநாயக்கா கொலை தொடர்பாக வத்தளை பகுதியில் மற்றுமோர் தமிழர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அரசு - முஸ்லிம் காங்கிரஸ் உறவை குலைக்க சதியாம்

## அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் கலாசார திணைக்கள விவகாரத்தை வைத்து அரசாங்கத்துக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த பலர் தீவிர முயற்சி எடுத்துவருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் கட்சிக்குள்ளும் நெருக்கடிகள் பல எழுந்துள்ளதாகவும் இவை தீர்க்கப்படாவிட்டால் தனது அமைச்சர் பதவியை துறக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம் என்பதற்காக எமது விகிதாசாரத்திற்கும் அதிகமாக பதவிகளை எதிர்பார்ப்பது தகாது எனவும் அவர் தனது கட்சி உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்

## புதிய சட்டமூலம்

(கொழும்பு)

பொதுமக்கள் தங்களது குறைபாடுகளை பாராளுமன்ற ஆணையாளருக்கு நேரடியாக சமர்ப்பிக்க வழி செய்யும் சட்ட மூலமொன்று நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சட்ட மூலத்தை நீதி- அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

# கொழும்பு பருப்பு மோசடி அரசிற்கு எதிரான சதியா?

## தமிழ் தனியார் வர்த்தக நிலையமும் சம்பந்தம்?

(கொழும்பு)

கொழும்பில் தனியொரு வர்த்தகருக்கு 20 ஆயிரம் கிலோ மைசூர் பருப்பு கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை களஞ்சியத்திலிருந்து கடந்த சனியன்று 936424 இலக்கம் கொண்ட ஒரேயொரு ரசீதுக்கு எவ்வாறு வழங்கப்பட்டது என்பது குறித்து மர்மமாகவே உள்ளது.

யாழ்ப்பாணம் கொண்டு செல்வதாக கூறி கொழும்பு டாம் வீதியில் உள்ள தனியார் வர்த்தக நிலைய களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப் படுவதற்காக 42 சிறி 1518 இலக்கம் கொண்ட லொறியில் இத்தொகுதி பருப்பின் ஒரு பகுதி ஏற்றப் பட்டிருந்தவேளை கோட்டை பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவன அதிகாரிகள் சிலர் புறக்கோட்டை வர்த்தர்கள் சிலருடன் இணைந்து இவ்வாறு பெருமளவில் விற்பனை செய்து அவற்றை பதுக்கி சில்லறை விற்பனையை தடுத்து புதிய அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்த எடுத்த சதியின் ஒரு பகுதியே இதுவென பொலிஸ் வட்டாரங்களில் நம்பப்படுகின்றது- விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது-

இம்மோசடியில் பெரும்கும்பல் ஈடுபட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இறக்குமதி செய்யும் பருப்பை மட்டுமல்ல சீனிமா, உருளைக்கிழங்கு ஆகியவை கூட பதுக்கப்பட்டுள்ளன. 14 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி, 8 ஆயிரம் மெட்ரிக் தொன் பருப்பு, 300 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு என்பன ஏற்கனவே பதுக்குவதற்காக எடுத்து செல்லப் பட்டுவிட்டன. பதுக்கப்பட்ட மாவின் தொகை தெரியவரவில்லை என அதிகாரிகள் கூறினர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவதாவது: யாழ்ப்பாணம் கொண்டு செல்லவென என்று கூறி கொழும்பு 12 இல் உள்ள கடைக்கு அனுப்புவதற்காக பெருமளவு பருப்பு லொறியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. இது பற்றி சந்தேகம் கொண்ட சில ஊழியர் பொலிசாருக்கு அறிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. லொறிச்சாரதியும் கிளீனரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். லொறியில் ஏற்றப்பட்டிருந்த பருப்பின் பெறுமதி 455, 000 ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது

இப்பெருந் தொகை பருப்பு கிலோரூ 29.75 வீதம் வி. கே. எஸ் பிறைவேட் லிமிட்டட் என்னும் இறக்குமதி நிறுவனம் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பருப்பு லொறியில் ஏற்றப்படுகையில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய ஊழியர் சிலர் லொறி சாரதியிடம் சென்று இது குறித்து விசாரித்த போது இம் மோசடிவெளியானது.

### 1978 முதல் இன்றுவரை

# கல்விஅமைச்சு பழிவாங்கல்; ஆராய இரு குழுக்கள்

(கொழும்பு)

1978ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கல்வி அமைச்சில் அரசியல் நோக்கத்திற்காக பழிவாங்கப்பட்டவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக இரண்டு கமிட்டிகளை அமைக்கப் போவதாக கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான அறிவித்துள்ளார்.

சுமார் 15 ஆயிரம் ஆசிரியர்கள் இந்த பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுளதாகவும், இவர்களது பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் நலன்களில் இவர்கள் பழிவாங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கில் நிலவும் அசாதாரண நிலையைக் கொண்டு பலர் இவ்வாறு அரசியல் இலாபம் கண்டு இருக்கின்றனர். கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி எய்தாது தகைமை இல்லாத அதிகாரிகள் பலர் இப்பிரதேசங்களில் இருப்பதாகவும் இவர்கள் அரசியல் சலுகை அடிப்படையில் பதவி வகிப்பதனை சுட்டிக் காட்டிய அவர் இதனை தனியாக ஒரு கமிட்டி ஆராயும் எனவும் இது தொடர்பான தகவல்களை பாதிக்கப்பட்டவர்கள் அமைச்சிற்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு அவர் 'திவயின' என்னும் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையைத் தான் தொடர்ந்து அனுமதிக்கப் போவதில்லை என்றும் எதிர் வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் நாடு பூராவும் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சகலரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டு. நகரில் இரவில் சீ- பிளேன் நோட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் அண்மைக் காலமாக இரவு நேரங்களில் சீ -பிளேன் பறப்பு அதிகரித்து காணப்படுகின்றது. கடந்த மூன்றாம் திகதி தொடர்ந்து இரவு வேளை விமானம் வட்டமிட்டு பரா வெளிச்சத்தில் நோட்டமிட்டது. இதனால் நகரில் பீதி நிலை காணப்படுகிறது.

இதேவேளை அன்று பிற்பகல் 2 மணியளவில் உலங்கு வானூர்தி ஒன்று படுவான் கரையில் சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்தேவியில் கொழும்பு வந்த 13 தமிழர்கள் ராகமவில் கைது

(கொழும்பு)

யாழ்தேவி ரயிலில் கொழும்பு வந்த 13 தமிழர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த 13 பேரும் றாகம ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதானோர் விபரங்கள் ஏதும் தெரியவரவில்லை. இவர்கள் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றவர்கள் எனக் கூறப்படுகிறது.

# வசந்தராஜாவிற்கு மாதம் 1 லட்சம் ரூபா வாடகை வீடு

(கொழும்பு)

ரூபவாகினி கூட்டுத்தாபன தலைவர் வசந்தராஜாவிற்கு மாதம் ஒரு லட்சம் ரூபா வாடகைக்கு வீடு ஒன்றை பொ. ஐ. முன்னணி அரசு வழங்கி உதவியுள்ளது.

இவ் வீடு இல7, சறனைவீதி கொழும்பு ஐந்தில் உள்ளது.

லண்டன் பி. பி. சியின் சிங்களச் சேவையின் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் பொ. ஐ. முன்னணி அரசு பதவி ஏற்றதும் இவர் இலங்கை வந்தார். ரூபவாகினி கூட்டுத்தாபன தலைவர் பதவி இவரிற்கு வழங்கப்பட்டது.

இவரது வீட்டு வாடகை வீட்டு செலவுகளிற்காக ரூபவாகினி கூட்டுத்தாபனம் இது வரை 50 லட்சம் ரூபா செலவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஐக்கிய தாதிகள் சங்கம் வேலை நிறுத்த எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தாதிகள் சங்கம் விடுத்த கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிமடுக்கத் தவறினால் வேலைநிறுத்தம் செய்யப்படும் என தெரிவித்துள்ளது.

சுமார் 12,500 அரச தாதிகள் அங்கம்வகிக்கும் ஐக்கிய தாதிகள் சங்கம், தாதிகளின் சம்பள உயர்வு கேட்கும் தாதிகளின் நலன்களை மேன்மைப் படுத்துமாறும் கேட்டு அரசிற்கு தமது கோரிக்கைகளை விடுத்திருந்தது. இதை அரசு தமக்கு வழங்கத்தவறின் தாம் வேலை நிறுத்தத்தில்

## வீரசிங்கம் நினைவுவிழா

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவு தினவிழா அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவை தமிழீழ நிர்

# நயினாதீவு படகுசேவை ஈ. பி. டி. பி. கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

நயினாதீவிற்கும் ஏனைய தீவகப் பகுதிகளுக்குமிடையே சேவையில் ஈடுபடும் பயணிகள் படகுகளில் பயணம் மேற்கொள்ளும் பொதுமக்கள் பலவித அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாக தெரியவருகிறது.

நயினாதீவு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஈ. பி. டி. பியினர் நடாத்தும் கடைகளுக்குத் தேவையான பொருட்களின் மூடைகள், மற்றும் ஈ. பி. டி. பியினரின் தோட்டங்களில் விளையும் காய்கறி மூடைகள் என்பவற்றுடன் கடலில் பிடிக்கப் படும் நண்டு, இறால் என்பவற்றை ஏற்றுவதற்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

இம் மூடைகளினால் இருக்கைகள் நிரம்பி விடுவதாகவும் பொதுமக்கள் பலர் நின்று கொண்டே பயணிப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

மேலும் படகுகளின் மேல் படகின் உள்ளே இருக்கும் மக்களை நனைத்து விடுவதாகவும் இதனால் அம்மக்கள் 'துர்நாற்றம்' வீசியவாறு தமது இடங்களில் இறங்கிச் செல்வதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. (22)

# டிப்ளோமா கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் 1992 -93 கல்வியாண்டு மாணவர்களுக்கு எதிர்வரும் 16-ம்திகதி அளவிலேயே கணக்கியலில் டிப்புளோமா கற்கை நெறி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இம்மாணவர்கள் தொகுதி வாரியாக

# முடிவுகள் கிடைக்கவில்லை

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை இன்பராஜ்
(தங்கராசா ஜெயசீலன்)

மலர்வு 17-01-1979

வீரச்சாவு 08-12-1991

(08.12-1991 அன்று வளலாயில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

கரணவாய் ஊர் கண்டெடுத்த கண்மணி
கள்ப்புலிகள் வாழ்த்திடும் ஜெயமணி
இளவயதில் ஈழம் கண்டிட புகுந்தமணி
ஈனர்களை கொன்றொழித்த புலிமணி.

உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

அந்திரான்,
கரணவாய் மேற்கு.

- குடும்பத்தினர்
(10307)


பெற்றது.

இவ்விழாவை தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் டொமினிக் தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆரம்பித்து வைத்தார். யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் டொமினிக் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் க. குணராசா ஆகியோர் உட்பட பலர் சிறப்புரையாற்றினர். நினைவுப்பேருரையை யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க. சிவானந்தமூர்த்தி நிகழ்த்தினார். இவ்விழாவில் ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தின் கலை நிகழ்ச்சியும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. (இ)

## விளையாட்டு விழா

(வடமராட்சி)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புச் சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கும் குயிலன் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா அல்வாய் வடக்கு குயிலன் பாலர் பாடசாலையில் திரு. சண். பாரதிதாசனின் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக அல்வாய் சிறிலங்கா வித்தியாலய அதிபர் திரு. கி. கணேஸ் கலந்து கொண்டார். தமிழீழ தேசியக் கொடியை அல்வாய் வடக்கு கிராமிய பொறுப்பாளர் திரு. கிண்ணியன் ஏற்றிவைத்தார். மாவீரர் குயிலனின் தாய் திருமதி இ. வள்ளிநாயகி மங்கள விளக்கேற்றினார். அவரது தந்தை திரு. கா. இராசரத்தினம் குயிலனின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தார்.

மற்றும் அணிநடை, விளையாட்டு நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன. (யோ)

விடுத்திருந்தது. இதை அரசு தமக்கு வழங்கத்தவறின் தாம் வேலை நிறுத்தத்தில் குதிக்கவேண்டி ஏற்படும் என தாதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தால் அரச வைத்தியசாலைகள் ஸ்தம்பிதநிலை அடையும் என கருதப்படுகிறது.

## முடிவுகள் கிடைக்கவில்லை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திற்கு நேற்று வரை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கிடைக்கவில்லை என திருமலையில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மூன்றுலட்சம் பேருக்கு வெளிநாட்டுவேலைவாய்ப்பு

### அமைச்சர் ராஜபக்ஸ உறுதி

(கொழும்பு)

அடுத்து வரும் ஆண்டுகளில் மூன்று இலட்சம் பேருக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கான காப்புறுதி திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கிளிநொச்சி வந்த
# றோனியோ இயந்திரம் எடுத்துவர படையினர் தடை

(வவுனியா)

வடபகுதிக்கான தடைநீக்கப்பட்ட பொருட்கள் பட்டியலில் உள்ள றோனியோ இயந்திரத்தை தாண்டிக்குளத்தினூடாக கொண்டு வருவதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.

அண்மையில் கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிமனைக்கு என கொண்டுவரப்பட்ட றோனியோ இயந்திரம் தாண்டிக்குளத்தில் வைத்து படையினரால் திருப்பி அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# லொறியால் மோதுண்டு வயோதிப பெண் பலி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செட்டித்தெருவில் லொறியால் மோதுண்டு படுகாயமடைந்த வயோதிபப் பெண் ஒருவர் யாழ் போதனா மருத்துவ மனைக்கு எடுத்து வரப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது மரணமானார்.

திங்கள் மாலை இடம்பெற்ற இவ் விபத்தின்போது நாவலர் வீதியைச் சேர்ந்தவரான தியாகராசா வேதவல்லி (வயது 70) என்னும் மூதாட்டியே மரணமானவராவார்.

இச் சம்பவத்தின் போது லொறி மினிபஸ்ஸை விலத்த முற்பட்ட போதே விபத்து நடந்ததாக தெரியவருகின்றது. (சி) (27)

நின்று கொண்டே பயணிப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

மேலும் படகுகளின் மேல் தட்டில் நண்டு, இறால் பெட்டிகளை வைத்து விட, அவற்றில் இருந்து ஓடும் துர் நாற்றம் கொண்ட நீர் விக்கப்படுகிறது.

தற்போது இம்மாணவர்கள் தொகுதி வாரியாக பிரிக்கப்பட்டு ஆங்கில கற்கை நெறிக்குட்படுத்தப்பட்டுள்ளனர். எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)


## பதவி வெற்றிடம்

1. தமிழ் தட்டெழுத்தாளர்
2. கணக்கு லிகிதர்

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரும் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

காலம்:- 10-12-94
நேரம்:- மு.ப. 9-30 - பி.ப 2-00 மணி
இடம்:- சுவையருவி, 5,7, இராசன் தெரு யாழ்ப்பாணம்.

(சி-10852)



சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வ- து) சுன்னாகம்

## தற்காலிக லொறிச் சாரதி / இரண்டு சில்லு உழவு இயந்திர தற்காலிக சாரதி பதவிகள்

மேற்படி சங்கத்தினால் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் சங்க வேலை நாட்களில் ரூ. 10/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி;- 22.12.94

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
06.12.94

- பொதுமுகாமையாளர்

(சி 10861)

# வரலாறும் சமூகக்கல்வியும் O/L

(நேற்றையதொடர்ச்சி)

## 2. நீர்வள நாகரிகத்தின் எழுச்சி

பௌத்த மதத்தின் வருகையுடன் மௌரிய கலாசார அம்சங்களானகட்டடக்கலை, சிற்பக்கலை, எழுத்துக்கலை, இலக்கியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறந்த நாகரிகம் ஒன்று உருவாகி வளர்ந்தது.

அனுராதபுர முதல்மன்னன் பண்டுகாபயன் அனுராதபுர நகர அமைப்பை திட்டமிட்டு தேவாலயங்கள் சுடுகாடுகள், நிர்வாக நிலையங்கள் போன்றவற்றை பொருத்தமான இடங்களில் அமைப்பித்தான். எனவே பௌத்த மதம் இலங்கைக்கு வரமுன்னர் இங்கு காணப்பட்ட வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள போன்றவற்றை இவனுடைய வரலாற்றுக் கதையிலிருந்து அறிய முடிகின்றது. வழிபாட்டு முறைகளுள் விருட்ச வணக்கம், சைனமதம், பிசாசு வணக்கம், இறந்தவரை வணங்குதல் போன்றன காணப்பட்டன.

இலங்கைக்கு கி.மு 247-ல் தேவநம்பியதிஸ்ஸ மன்னன் காலத்தில் மகிந்ததேரரால் பொசன் பௌர்ணமி தினத்தன்று (ஆனி) பௌத்தமதம் கொண்டு வரப்பட்டது. இவருடைய வருகையால் அருட்டனும் அவனுடன் 60 பேரும் துறவிகளாக மாற்றப்பட்டனர். அனுலா தேவியை துறவியாக மாற்றும் பொருட்டு சங்கமித்தை வரவழைக்கப்பட்டாள். இவள் போதி விருட்சத்தின் வலது பக்க கிளையுடன் ஜம்புகோள பட்டணத்தில் வந்து இறங்கினாள். இது மகாமேக நந்த வனத்தில் நாட்டப்பட்டது.

மன்னன் தேவநம்பியதிஸ்ஸனால் மகிந்ததேரருக்கு கொடுக்கப்பட்ட மகா மேக வனத்தில் மகாவிகாரை அமைக்கப்பட்டது இந்தவிகாரையே தேரவாத பௌத்தத்தின் மையமாக விளங்கியது

### பௌத்தமதம்இலங்கையில் பரவியதற்குரிய காரணங்கள்

1. அமைச்சர்கள், அரசர்கள் ஆகியோரும்ஏனைய முதன்மை மக்களும் பௌத்த மதத்தை தழுவியமை.
2. இலங்கையில் பௌத்த மதம் வருவதற்கு முன்னர் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டுக்கோப்புடைய மதம் இருக்கவில்லை.
3. பௌத்தமதம் மௌரிய கலாசாரத்தின் சிறப்பம்சங்களுடன் இங்குவந்தவை (உ+ம்)மௌரியகட்டடகலை எழுத்துக்கலை, சிற்பக்கலை, இலக்கியம்
4. மகாபோதி விருட்சம் நாட்டுவிழாவிற்கு வந்தவர்களால் பௌத்த மதம் பரப்பப்பட்டது.

பௌத்தமதம் இலங்கையில் பரவியதால் ஏற்பட்ட விளைவுகள்:

1) மக்கள் அகிம்சை முறையில் வாழ்வதற்குக் கற்றுக் கொண்டனர்
2) சிங்கள பௌத்த பண்பாடு உருவானது
3) சிங்கள மொழி வளம் பெற்றது.
4) இக்காலத்தில் மக்கள் வழிபாட்டுக்கென சைத்தியங்கள், விகாரைகள் அமைக்கப்பட்டன
(உ+ம்) இசுறுமுனியா, வெஸ்ஸசிரிய, மிருந்தலை, தூபராம.
5) மௌரியகாலகட்டடகலை சிற்பக்கலை, ஓவியங்கள், எழுத்துத்தொகுதி இலக்கியம் போன்றவை வளர்ச்சியடைந்தன.

### கட்டடக்கலை

கி.பி. 3-ம் நூற்றாண்டின் பின் அமைக்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகள் மட்டுமே இன்றுவரை கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் அனேகமானவை சமயக்கட்டங்களாகவும் அல்லது பிக்குனிகளின் தேவை கருதி அமைக்கப் பட்டனவாகவும் காணப்பட்டுள்ளன இக்கால கட்டடக் கலையானது இரு அம்சங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது.

1) வழிபாட்டுக்கான தாகபைகள், போதி மனைகள், சிலைக்கூடம் ஆகியவற்றை அமைக்கும்முறை
2) குருமார்களுக்கான விகாரை இல்லங்களையும் ஏனைய சமயத்தேவை கருதி பூர்த்திசெய்யும்கட்டடங்களையும் அமைக்கும் முறையாகும் இவற்றுள் வைத்தியசாலை போய மனை, சிலைக்கூடம், ஸ்னான தடாகம், மலசலகூடம் போன்றன அடங்குகின்றன.

துட்டகைமுனு :- உறுவன்வெலிசய, மிருசுவட்டி தாகபை, லோவமகாபாய
வலகம்பா :- அபயகிரிதாகபை
மகாசேனன் :- ஜேதவனதாகபை

விஜயபாகு மனையும் பண்டுவஸ்நுவர என்ற இடத்தில் காணப்படுகின்ற பராக்கிரமபாகு மன்னனின் மாளிகையும் பொலநறுவையிலுள்ள பராக்கிரமபாகு, நிசங்கமல்லன் ஆகியோரின் அரண்மனைகளும் புராதன கட்டடக்கலையினை எடுத்துக்காட்டுகின்றன.

### செதுக்கற் கலையும் சிற்பக் கலையும்

இலங்கைக்கு சங்கமித்தையுடன் வருகைதந்த சிற்ப செதுக்கலைஞர்கள் பலரும் இருந்தார்கள். காஞ்சி, அமராவதி ஆகிய இடங்களில் காணப்படுகின்ற செதுக்கல் வேலைகளிலுள்ள தாவரங்கள், மிருகங்கள் பூங்கொடிகள் ஆகியவற்றின் உருவங்கள் இலங்கையின் புராதன கால சிற்பசெதுக்கல் வேலைகளிற்கு வழிகாட்டியாக அமைந்தன. எனினும் காலப் போக்கில் இந்த சிற்ப செதுக்கல் கலை இலங்கைக்குரிய தனிச் சிறப்புடன் வளர்ந்து வந்துள்ளது. அவற்றில் சிறப்பானது சந்திரவட்டக்கல் ஆகும்.

### சந்திரவட்டக்கல்

இது செதுக்கல் வேலைப்பாடுடைய பிறைவடிவான ஒரு கற்பாளமாகும். இதில் தாமரை மலரின் பாதியைச் சுற்றித் தோரண வேலைப்பாடுகளும் அன்னங்களின் ஒருவரிசையையும் சிங்கம், யானை, குதிரை, ரிஷபம் (எருது) ஆகியவற்றின் ஒருவரிசையும் ஓரத்தில் தீச்சுவாலையால் அல்லது இதழ்களாலான ஒரு சித்திர வேலைப்பாடும் இதிலே காணப்பட்டது.

மிக நுண்ணிய சிற்பசெதுக்கல் வேலையின் வளர்ச்சி அனுராதபுரத்தில் இருந்தது. இசுறுமுனிய காதலர் சோடியின் சிற்பங்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### மொழியும் இலக்கியமும்

விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் சுதேச மொழி காணப்பட்டது. இன்றும் அது வயிறு, தலை, வாய் ஆகியவற்றைக் குறிப்பதற்கு சிங்களத்தில் இவை பயன்படுகின்றன. இது ஒரு ஊடகமாகவே கொள்ளப்படுகின்றது. நமக்கு கிடைத்துள்ள ஆதாரங்களின்படி பௌத்த மதத்தின் வருகையின் பின் இந்நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட சொற்கோவை மொழி, இலக்கியம் ஆகியவற்றினடிப் படையிலேயே அனுராதபுர காலத்து சொற்கோவையும் இலக்கியமும் உருவாகியதாக நம்பமுடிகின்றது.

புராதன காலத்தில் இலங்கையிலே காணப்பட்ட ஹெல மொழியின் மூலமோ அரிட்டன் உட்பட முதலாவது பௌத்த துறவிகளுக்கு மகிந்த தேரரால் போதிக்கப்பட்டது.

கி.பி. 5-ம்நூற்றாண்டில் புத்தகோச முதலான உரையாசிரியர்களால் ஹெல விளக்கவுரைபாளிமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. தம்பியா அட்டுவா, ஹட்ட பதய, சிகலவந்த வினிச, சியபஸ்லகர அனுராதபுர கால சிங்கள இலக்கியங்கள் ஆகும்.

மேலும் சிகிரியாவின் கண்ணாடிச் சுவர்களில் வரையப்பட்ட நூற்றுக்கணக்கான கவிதைகளும் அனுராதபுரகாலத்தை பிரதிபலிக்கின்றன. அத்துடன் 7-ம் நூற்றாண்டில் அக்போமன்னன் காலத்தில் 12 பிரசித்திபெற்ற புலவர்கள் வாழ்ந்துள்ளனர். தஹம், பாபிறி, அனுருத்த போன்றவர்கள் இவர்களுள் முக்கியமானவர்கள்.

வடமொழிஇலக்கியங்களில் கி.பி. 5-ல்குமாரதாச மன்னனின் ''ஜானகி ஹறனய'' என்ற நாவல் எழுதப்பட்டது 4-ம்சேனமன்னனால்எழுதப்பட்ட ''சியபஸ்கர'' என்ற நூல் சிறப்பானது.

### ஓவியக்கலை

ஆரம்பகாலத்திலிருந்தே இலங்கையில் ஓவியக்கலை இருந்தமைக்குச் சான்றாக சித்தபஸ்பல கறப்பககுகை போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனினும் இவை ஓவியங்களின் எச்சங்களாகவே உள்ளன. எனினும் பூரண ஓவியக் கலை சிகிரியாக்குகைகளிலேயே காணப்படுகின்றது இது கி.பி. 5-ம்நூற்றாண்டுக் குரியது.

சிகிரியாக் குகைகளில் வரையப்பட்ட அழகிய பெண் உருவங்கள், தாமரை அல்லி, நீலோற்பனம் ஆகிய மலர்களை சூடிக் கொண்டும், அவற்றைக் கைகளிலும்கொண்டுள்ளனர். இவை சமயகாலஇந்தியாவின் அஜந்தாக் குகைகளில் காணப்பட்டஓவியக்கலையை ஒத்துள்ளன. இந்தஓவியங்களுள்மஞ்சள், கபிலம், சிவப்பு, நீலம் போன்ற வர்ணங்கள் தெளிவாக உள்ளன திம்புலாகலை குகைகளில் காணப்படுகின்ற ஓவியங்களும் பொலநறுவை உத்திரா நாமயவிற் காணப்படும் ஓவியங்களும் பொலநறுவை காலத்து ஓவியர்களிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

நீர்வள நாகரிகமானது கி.பி. 6-12 வரை சிறப்புற்று விளங்கியது. இது 1215ல் முற்றாக வீழ்ச்சியடையத் தொடங்கியது.

1. பொலநறுவைக் காலத்தின் இறுதியில் சிங்காசன உரிமை பற்றி ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக மத்திய நிர்வாகத்தில் குழப்பமுண்டானமை.
2. விவசாய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை மத்திய நிர்வாகத்துக்கு ஏற்பட்டமை
3. மகானின் படையெடுப்பால் மக்கள் தென்மேற்குப் பகுதி உருகுணைரட்டை மலையரட்டை போன்ற பகுதிகளுக்கு சென்றமை. இதனால் குளங்களும், நீர்ப்பாசன அமைப்புகளும் புனரமைக்கப்படவில்லை.
4. வயல்வெளிகள் அழிந்து காடுகள் தோன்றின. இதனால் மலேரியா நோய்கள் ஏற்பட்டமை

### நாகரிகம் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தமையும், இராச்சியங்கள் இடம் மாறியமையும்

இலங்கையின் வரலாற்றிலே அநுராதபுர காலமும் பொலநறுவைக் காலமும் ஒருபொற்காலம் எனக் கருதப்படுகிறது. குறிப்பாக பொலநறுவைக் காலப் பகுதியில் பராக்கிரமபாகுவின் காலம் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றிலேயே அதிக கல்வெட்டுக்களை அமைத்த மன்னன் எனப் பெயர்பெற்ற கலிங்க நாட்டு மன்னன் நிஸங்கமல்லனின் காலமும் குறிப்பிடத்தக்கது. இவன் இறந்த பின் இராசரட்டை நாகரிகம் சீர்குலையத் தொடங்கியது என குறிப்பிடலாம். ஏனெனில் இக்காலப்பகுதியில் கலிங்க குலத்தவருக்கும், பாண்டிய குலத்தவருக்கும் இடையே பிணக்குகள் தோன்றின. இவ்வாறானதொரு நிலைமையில் 1215ல் கலிங்கநாட்டு மன்னனான மாகன் பொலநறுவையை ஆக்கிரமித்தான். இவனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு அடக்குமுறையைக் கையாண்டான். பௌத்த மக்களின் கலாசார மையங்கள் பாழடைந்தன. நீர்ப்பாசனம் புனரமைக்கப்படவில்லை இவ்வாறானதொரு நிலையில் குளங்களை அண்டிய பகுதிகள் காடுகளாயின. மலேரியா நோய் பரவியது. இவ்வாறானதொரு நிலையில் மக்கள் தென்மேற்கு நோக்கியும், மலையரட்டை நோக்கியும் இடம்பெயர்ந்தனர்,

எனவே பொலநறுவைக்குப் பின், பின்வரும் நகரங்களுள் ஆட்சிப் பீடம் மாற்றி அமைக்கப்பட்டது.

தம்பதெனியா இராச்சியம்
யாப்பகூவ இராச்சியம்
குருணாகல் இராச்சியம்
கம்பளை இராச்சியம்
கோட்டை இராச்சியம்
கண்டி இராச்சியம்

### தம்பதெனியா இராச்சியம்

தம்பதெனியாவை தலைநகராக்கிய மன்னன் 3-ம் விஜயபாகு ஆவான். இவனது இறப்பின் பின் கி.பி. 1236-ல்சிங்காசனமேறிய 2-ம் பராக்கிரமபாகு முக்கியத்துவம் பெறுகிறான். இவன் பௌத்த மதத்தின் பொருட்டும் நாட்டின் அரசியல் ரீதியாகவும் பல சேவைகளைச் செய்துள்ளான்.

இவன் 1247 இல் யாவா நாட்டு அரசன் சந்திரபானு என்பவனின் படையெடுப்பை தோற்கடித்தான். இம்மன்னன் மாகனைத் துரத்தும் பொருட்டு தென் இந்தியப் பாண்டியப் பேரரசின் உதவியைப் பெற்றதாகவும் கூறப்படுகிறது 1255 இல் மாகன் தோற்கடிக்கப்பட்டான் மீண்டும் 1261இல் சந்திரபானுவின் படையை சந்தித்து அப்படை எடுப்பிலும்வெற்றி பெற்றான்.

இம்மன்னன் சிறந்த பண்டிதனாகவும் விளங்கினான் இவனால் ''விசுத்திமார்க்கசன்னய என்ற நூல் எழுதப்பட்டது இம்மன்னன் ''கவிகாலசாகித்ய சர்வஞபண்டிதர் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தான்அத்துடன் கவிசிலுமின என்ற நூலும் இவனது படைப்பாகும்.

### 2. யாப்பகூவஇராச்சியம்

தம்பதெனியாவை அடுத்து பாதுகாப்பான இடம் எனக் கருதி 1-ம்புவனேகபாகுதலைநகரத்தினை இங்கு இடம் மாற்றினான் இவன் இங்கிருந்து 12 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் கி.பி 1284 ல் குலசேகரன் என்ற பாண்டிய மன்னனின் படையெடுப்பின் போது யாப்பகூவ முற்றுகை இடப்பட்டது. ஏனெனில் பாண்டியர் தந்ததாதுவை கொண்டு சென்றமை ஆகும்.

### 3. குருணாகல் இராச்சியம்

குருணாகலை 2-ம்புவனேகபாகு தலைநகராக்கிக் கொண்டவன் இவனுக்குப் பின் இவன் மகன் 4-ம் பராக்கிரமபாகு சிங்காசனம் ஏறினான்.

இவனால் தந்ததாதுவை பாதுகாக்க கோவில் ஒன்று கட்டப்பட்டதுடன் பலகாணி

(2 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், அரச/அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடாத்தும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், அரச/அரசசார்பற்ற

நிறுவனங்களும் இணைந்து நடாத்தும்

# 4-வது வதிவிட வேளாண்மைப் போட்டி 94/95

## யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது அந்நிய ஒடுக்கு முறைகளிலிருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச்செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வை கட்டி எழுப்புவதற்கு வழி வகுத்துள்ளது. இப்பணியில் செயல்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயல் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் முகமாகவும் நான்காவது முறையாக 1994/95 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### போட்டிக்கான நிபந்தனைகள்

01. வீட்டுடன் அமைந்துள்ள 4 பரப்பிற்குட்பட்ட காணியில் வேளாண்மை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

02. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்செய்கையை கவர்ச்சியாக அமைத்தல்.

    10 அடி நீளமும், 3 அடி அகலமுமான பாத்திகளில் உள்நாட்டு மரக்கறிப் பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றோவா, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரை போன்றவற்றையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்றவற்றையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகைப் பயிரினங்களில் மூன்று உள்நாட்டு மரக்கறிப்பயிர்களும் இரண்டு மேல்நாட்டு மரக்கறிப்பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

    சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப்பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்

03. 10 அடி நீளமும், 3அடி அகலமுமான பாத்திகளில் இலை வகைகள், மரக்கறிப்பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்கூன்கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாவது இருத்தல் வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், கருவேப்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

05. பழமரங்களான பப்பாசி, வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலும்மிச்சை ஆகியவற்றுள் நான்கு மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகிபவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல்வேண்டும்.

07. கூட்டெரு குழிமுறையிலோ அல்லது குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

08. தேனீவளர்த்தல் குறைந்தது ஒரு பெட்டியிலாவது அல்லது மரக்கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல் குறைந்தது பத்துகோழிகள் (கூடு அமைப்பு) அல்லது கனகூல முறையில் வளர்த்தல் வேண்டும்.

10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக ஐந்து கோழிகள் கூடுதலாக வளர்க்கப்படல் வேண்டும்.

11. பசுமாடு ஒன்று, அல்லது மறியாடு ஒன்றுவளர்க்கப்படல் வேண்டும். இவை இரண்டினையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்குத் தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள்முருங்கை, சீமைக்கிழுவை என்பன இருத்தல் வேண்டும்.

14. பதிவேடு பேணல் - மரக்கறிப்பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல் வேண்டும்.

15. போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் விறகுத்தேவைக்கான மரங்கள் நட்டுப் பராமரிக்கப்படல் வேண்டும். இதற்கான மரங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பகுதியால் இலவசமாக வழங்கப்படும். இதற்கான புள்ளியும் பிரத்தியேகமாக இடப்பட்டு போட்டித் தெரிவில் கணிக்கப்படும்.

### குறிப்பு;

01. மேலதிகமாக தேவைப்படும் விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கோட்ட, வட்ட, செயலகங்களின் கிராமிய உற்பத்திக் குழுக்கள்' விவசாயப் போதனாசிரியர்கள் கிராம சேவை அலுவலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

02. இப்போட்டியில் கலந்து கொள்வோர் 01/10/94 தொடக்கம் 31/01/95 வரையுள்ளகாலப் பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருப்பதோடு விலங்கு வேளாண்மை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 03. போட்டிகள் பார்வையிடும் காலம்

- முதலாம் கட்டம் பார்வையிடுதல்
  20/01/95 தொடக்கம் 31/01/95 வரை
- இரண்டாம் கட்டம் பார்வையிடுதல்
  15/02/95 தொடக்கம் 25/02/95 வரை
- மூன்றாம் கட்டம் பார்வையிடுதல்
  10/03/95 தொடக்கம் 15/03/95 வரை

### 04. விண்ணப்பங்கள்

விண்ணப்பப்படிவங்கள் கிராமிய உற்பத்திக் குழு அலுவலகங்களில் கிராம சேவையாளர் அலுவலகங்கள், கமநலசேவைத் திணைக்களம், அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பெற்று 30-12-94 க்கு முன் மேற்படி விண்ணப்பங்கள் பெற்ற அதே அலுவலகங்களில் நேரடியாக கையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-10834)

பொ... யாழ்ப்பாணம் ...ார் இளைநூல...

### சிந்தனைக்கு

மறுப்பதற்கு துணிவு இல்லாதபோது,
தாமதம் செய்வது வழக்கமே.

சேர். வோல்ட்டர் ஸ்கொட்

ஈழநாதம்

31, மகேந்திரா விதி, யாழ்ப்பாணம் 08-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தொடரும் புறக்கணிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்படுவதென்பது சந்திரிகா அரசிலும் தொடரலாம் என்பதற்கான சமிக்கைகள் சில தென்படத் தொடங்குகின்றன. இப்புறக்கணிப்பானது அவர் பேசும் இனங்களுக் கிடையிலான ஐக்கியம், சமத்துவம், சமநீதி என்பனவற்றைப் பற்றி கேள்விகள் எழுப்புவதை தவிர்க்க முடியாது செய்கின்றன.

இவை ஊகங்களின் அடிப்படையிலான குற்றச்சாட்டோ, குறைகூறுதலோ அல்ல. அரசதரப்பினரின் அறிவிப்புக்கள் இதற்கு ஆதாரமானவை. எடுத்துக்காட்டாக வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அமெரிக்காவில் வழங்கப்பட்ட மருத்துவ உதவி இராணுவத்தினரின் தேவைக்கு வழங்கப்பட்டதைக் கூறலாம்.

இதை மேலும் நிருபிப்பது போன்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்காவின் அறிவிப்பும் உள்ளது. ''இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் யுத்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வுப் பணிகள் யாழ்·குடாநாட்டில் அமுலுக்கு வராது'' என அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அரசாங்கம் புறக்கணிப்பை மட்டும் செய்யவில்லை. சமாதானப் பேச்சுக்களில் உள்ள நம்பிக்கையீனங்களைக் காட்டுவதாகவே உள்ளது.

சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பொழுது இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படும் என உறுதி அளித்த அதே வேளை, தமிழ் மக்கள் காலம் காலமாகப் புறக்கணிப்புக்கு உள்ளாகியமை தான் இனப்பிரச்சினை இன்றைய கட்டத்தை அடைவதற்குக் காரணம் எனவும் கூறியது, தமது ஆட்சியில் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்தது.

இதற்கும் மேலாக தமிழ்மக்களின் அத்தியாவசியத் தேவைகளும், அவசியத் தேவைகளும் உடன் சீர்செய்யப்படும் எனவும் தெரிவித்தது. இதில் மின்சாரம் உட்பட அவசியமான தேவைகள் யாவும் சிலவார இடைவெளியில், நிவர்த்தி செய்யப்படும் என்றது. பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், மின்சக்தி அமைச்சருமான அனுருத்த ரத்வத்த வடபகுதிக்கு அனுப்புவதற்கென ஆறு

குடாநாட்டிற்கான அத்தியாவசிய பொருட்கள்

## கப்பல் கட்டண விவகாரம் அமைச்சு மட்டத்தில் பரிசீலிப்பு

(யாழ்ப்பாணம்)
நீண்டகாலமாக யாழ் குடாநாட்டிற்கு அத்தியாவசியப் பொருட்களை கூட்டுறவுச்சங்கங்களிற்கு எடுத்துவருவதற்கு அறவிடப்பட்ட கப்பல் கட்டணம் தொடர்பாக உணவு வர்த்தகத்துறை அமைச்சர் கிங்ஸ்லி ரி. விக்கிரமரட்ணவிற்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனு தற்போது கூட்டுறவுஅமைச்சர் அமரசிறி தொடங்கொடயிடம் பொருத்தமான நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டிற்கு தரைமார்க்கமான பாதை தடைப்பட்டதைத்தொடர்ந்து கப்பல் மூலம்பொருள்களை தருவிப்பதில் இலவச நிவாரணப் பொருள்களைத் தவிர ஏனையபொருள்களிற்கு கப்பல் கட்டணம் அறவிடப்பட்டு வந்தமையினால் அத்தியாவசியப் பொருள்களின் விலை குடா நாட்டில் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

ஆதலால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்காக யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை எடுத்த பகீரத முயற்சியின் பலனாக தற்போதைய முடிவு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இன்னும் ஓரிரு வாரங்களில் இதற்கு ஆக்கபூர்வமான பதில்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் விளக்கங்களை சம்பந்தப்பட்டவர்களிற்கு அளிக்கும்பொருட்டு யாழ். மா. கூ. சபை தலைவர் நேற்று கொழும்பு புறப்பட்டுள்ளார்.

இவர் கப்பல் கட்டணம் தொடர்பாகவும் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தை நடாத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது

(இ) (நி)

ஆனி மாதத்தில் செயலகத்தில் சமர்ப்பித்திருந்தும்

## விண்ணப்பம் தாமதமானதால் அ. அட்டைகள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)
சாதாரணதர பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை தேவைப்பட்டோர் விசேட ஏற்பாட்டின்படி ஆனிமாதத்திற்கு முன்பாக யாழ் செயலகத்தின் ஆட்பதிவுத் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை அவர்களிற்கு தேசிய அடையாள அட்டைகள் வந்துசேரவில்லை.

இவர்களின் விண்ணப்பங்கள் கடந்த ஐப்பசி மாத இறுதிப் பகுதியிலேயே கொழும்பு ஆட்பதிவுத்திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதாக கொழும்பு ஆட்பதிவுத்திணைக்களத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் விண்ணப்பத்தில் க. பொ. த. சா. தா க. பெ. த. உ. த பரீட்சை எழுதிய மாணவர்கள் செயலகத்தின் விசேட அறிவுறுத்தலிற்கிணங்க விண்ணப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இருந்தும் கடந்த ஆவணி மாதம் க. பொ. த. உ. த. பரீட்சையில் தோற்றியவர்களிற்கும் தற்பொழுது க.பொ. த, த. சா பரீட்சையில் தோற்றிக் கொண்டிருப்பவர்களிற்கும் இவ் அடையாள அட்டைகள் கிடைக்கப்பெறவில்லை.

இவ் அடையாள அட்டை விண்ணப்பங்கள் செயலகத்தினால் ஏற்றுக்கொண்டதன் பின்பு பலமுறைகளில் கப்பலில் கொழும்பிற்கு செயலக ஆவணங்கள் எடுத்துச்செல்லப்பட்டிருந்தபோதும் இவை செயலகத்தில் நீண்ட நாட்களாக தேங்கிக்கிடந்தது விண்ணப்பதாரிகளிற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நடைபெறும் க. பொ, த. சாதாரண தரப்பரீட்சையில் அடையாள அட்டை இன்றி பல மாணவர்கள் பரீட்சை எழுத முடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## 6000 ஆசிரிய வெற்றிடம் தமிழ் பகுதியில் நிலவுகிறது

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 71 கோட்டங்களிலும் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியப் பதவி வெற்றிடங்கள் இருப்பதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கே. தியாகராசா தெரிவித்தார்.

ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், அழகியல் பாடங்களான சித்திரம் சங்கீதம், நடனம் போன்றவற்றிலேயே அதிக வெற்றிடங்கள் உள்ளன. மேலதிக கலைப்பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளனர். அத்தோடு நகர்ப்புற பாடசாலைகளிலும் மேலதிக ஆசிரியர்கள் பணியாற்றி வருவதால் பின்தங்கிய கிராமப்புறங்களில் ஆசிரியர் தட்டுப்பாடு இருந்து வருகிறது.

ஆசிரிய இடமாற்றங்களில் பல்வேறு தலையீடுகள் இருப்பதால் பின்தங்கிய பகுதிகளுக்கு நியமிக்க முடியாத நிலை இருப்பதாகவும் அவர் தெரி

எதிர்கால ஆசிரிய நியமனங்களில் திறமை தகுதிக்கே முன்னுரிமை அளிக்கப்படும் ஜனசக்தி போன்ற விடயங்களை கவனத்திற்கொள்ளக் கூடாதென கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தை விபரம் டில்லியுடன் பரிமாறப்படாது

### வெளியுறவு அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடாத்த உள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பான எந்த கருத்துப் பரிமாற்றமும் இந்தியபயணத்தின் போது நடைபெறமாட்டாது என வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தினமின என்னும் சிங்கள பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; தனது இந்தியாவிற்கான பயண நிகழ்ச்சி நிரலில் இது இடம் பெறவில்லை என தெரிவித்துள்ளார் அமைச்சர் தற்போது இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய தூதுவரும் புதுடில்லி சென்றுள்ளார்

### பேச்சுக்களின்போது உடனிருப்பார்

(கொழும்பு)
சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடில்லி செல்வதற்கு முன்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் டில்லி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா அமைச்சர் நேற்று டில்லி போய் சேர்ந்தார். அவர் அங்கு இந்திய தலைவர்களை சந்தித்து பேசும் போது இலங்கைக்கான இந்திய தூதுவரும் உடனிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலை அனுமதிக்கு நன்கொடை அறவீடு

(யாழ்ப்பாணம்)
யாழ் நகர பிரபல பாடசாலைகளில் புதிய .கல்வியாண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கென பெருந்தொகைப் பணத்தை பாடசாலை அதிபர்கள் நன்கொடை என்ற பெயரில் வற்புறுத்தி பெற்றுக் கொள்வதாக பெற்றோர் மிகுந்த வேதனையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர்.

ஆண்டு ஒன்றிற்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கே மேற்படி நன்கொடை என்ற பெயரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா முதல் மூவாயிரம் ரூபாவிற்கு மேல் அறவிடப்பட்டுள்ளது.

இத் தொகையானது பெற்றோரின் வசதியை கருத்திற் கொண்டு வற்புறுத்தப்பட்டதாக தெரிய வருகின்றது.

மேற்படி தொகையில் நிலையான வருமானம் எதுவுமற்ற மிகவும் வறிய நிலையில் உள்ள பெற்றோரிடமிருந்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் அதற்கு மேல் இரண்டாயிரம் ரூபா, மூவாயிரம் என்று உயர்ந்து சென்றுள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (சி)

வடக்கு- கிழக்கு மாகாண

## திட்டமிடல் இணைப்புக்குழு 12-ல் திருமலையில்கூடுகிறது

(யாழ்ப்பாணம்)
வட - கிழக்கு மாகாணத்தின் திட்டமிடல் இணைப்புக் குழுக் கூட்டம் வரும் 12-ம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இதற்கு யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுவாமிநாதனை உடன் புறப்பட்டுச் செல்லுமாறு யாழ். மாவட்ட புதிய அரச அதிபர் பணித்துள்ளார்.

இதற்கான அறிவித்தல் கடிதம் ஒன்று செயலகத்திற்கு அரச அதிபரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து திட்டமிடல் பணிப்பாளர் விரைவில் திருகோணமலைக்கு செல்ல உள்ளார்.

## வைத்திய சிபார்சு இருப்பின்

காப்பு அமைச்சரும், மின்சக்தி அமைச்சருமான அநுருத்த ரத்வத்த வடபகுதிக்கு அனுப்புவதற்கென ஆறு பாரிய மின் பிறப்பாக்கிகள் கொழும்பு துறைமுகத்தில் காத்திருப்பதாக தெரிவித்தார்.

ஆனால் இவற்றில் எவையும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. அரசாங்கம் தடைவிதிக்கப்பட்ட பொருட்களின் ஒரு தொகுதிக்கான தடையை நீக்குவதாகப் பெருமை பேசிக் கொண்டாலும், அவற்றில் எத்தனை பொருட்கள் வந்து சேர அனுமதிக்கப்படுகின்றன என்பது கேள்விக்குரியதே. அவ்வாறு ஒரு சிலவற்றை அனுமதித்தாலும் யானைப் பசிக்குச் சோளப் பொரி போன்று சிறிய அளவிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் வடக்கே பொருட்கள் எடுத்துவர புதிய விதிமுறைகள் சில அறிமுகப்படுத்தப்பட்டும் உள்ளன. இதில் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியது, அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி பெற வேண்டும் என்பதாகும். அதாவது புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அனுமதியுடன் பொருட்களை எடுத்து வர இருந்த உத்தரவாதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தவகையில் பார்க்கும் போது சந்திரிகா அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த காலக் கொள்கையில் இருந்து பெரியளவில் மாறுபட்ட தன்மை எதையும் பிரதிபலிக்கவில்லை என்றே கூறவேண்டும். யுத்தமே ஒரே தீர்வு எனக் கூறிக் கொண்ட அரசின் நடவடிக்கைக்கும், சமாதான வழியே தீர்விற்கான வழி எனக் கூறிக்கொள்ளும் அரசிற்கிடையிலான செயற்பாடு பெரிதாக வேறுபட வில்லை என்பதே இதில் முக்கியமானது.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கம் மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை ஏமாற்ற முனைகின்றதோ என எண்ண வைக்கின்றது. இல்லாது போனால் அறிவிப்புக்களுக்கும், செயற்பாட்டிற்கும் இடையில் வேறுபாடு இருக்க வேண்டிய அவசியம் என்ன? சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கையை தமிழ்மக்களுக்கு வழங்கப்படும் வசதிகள், சலுகைகள் என ஏன் கருத வேண்டும்?

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகள் அது இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வில் பின்வாங்குவதாகவே கருத இடமளிக்கும். சாதாரண பிரச்சினைகளைத் தீர்ப்பதையே சந்தேகக்கண் கொண்டு அரசாங்கம் பார்க்குமானால் இனப்பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வில் அதனால் பெரும் முன்னேற்றம் காண முடியாது. இதேசமயம் தமிழ் மக்களும் சமாதான முயற்சிகளைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது தவிர்க்க முடியாதுபோகும். ஏனெனில் அவர்களுக்குத்தாம் ஏமாற்றப்பட்ட அனுபவம் நிறையவே உண்டு.

னம் போன்றவற்றிலேயே அதிக வெற்றிடங்கள் உள்ளன.

க்கு நியமிக்க முடியாத நிலை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி ஆசிரியர்கள் அதிகளவில் ஓய்வு

(கொழும்பு)

1994 ம் ஆண்டில் ஆசிரியர்கள் சேவையிலிருந்து தாமாக விலகியதாக கடிதங்கள் அனுப்பப்பட்ட கூடிய தொகையை உடைய மாவட்டம் கிளிநொச்சி மாவட்டம் என வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் தாமாகவே விலகியுள்ளதாக கடிதங்கள் அனுப்பப்பட்டதாக எவ்வித தகவல்களும் வடக்கு கிழக்கு மாகாண' அமைச்சிற்குத்தகவல்கள்கிடைக்கவில்லையென மாகாண அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் நிலைமையிருக்கையில் கிளிநொக்சி மாவட்டத்தில் மாத்திரம் ஆசிரியர்கள் ஏன் தாமாகவே சேவையிலிருந்து விலகுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமலிருப்பதாக அமைச்சு அதிகாரி கவலையுடன் தெரிவித்தார்.

## ஆரம்ப பயிலுநர் ஆசிரியர் சேவையாற்றலாம்

### கல்விச் சேவைகள் சபை அறிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்து நிரந்தர பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் பெற்றவர்களில் சில ஆசிரியர்களுக்கு அவர்களின் பாடத்துறையாகிய விவசாயம், வர்த்தகம் உடற்கல்வி, மனைப் பொருளியல் சமூகக்கல்வி, தொழில்நுட்பம் போன்ற விசேட பாடத்துறைப் பயிலுநர்களாக நியமனம் வழங்காது. ஆரம்ப பயிலுநர் நியமனம் வழங்கியதோடு கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கும் இடமாற்றம் மாவட்டக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டது. இதனைப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் இ.த.ஆ. சங்கம் ஆசேபித்த போதும் இது கல்விச் சேவை சபையின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட கொள்கை அடிப்படையிலான இடமாற்றம் எனவும் இரத்துச் செய்ய முடியாதெனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

கல்விச்சேவை சபைச் செயலாளரைச் சந்தித்த தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் கல்வி சேவை சபையின் சுற்று நிருபத்தில் உள்ள குறையைச் சுட்டிக்காட்டியதையடுத்து அச்சுற்று நிருபத்திற்கு திருத்தம் ஒன்றை சபையின் செயலாளர் அனுப்பியிருப்பதோடு தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் பெற்ற பாடசாலையில் வெற்றிடம் இருப்பின் அவர்களை தொடர்ந்து அப்பாடசாலையில் சேவையாற்ற அனுமதிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லையெனவும் தெரிவித்து கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளருக்கும் கிளிநொச்சிக்கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பணிப்பாளர் எடுக்கும் நடவடிக்கையையும் தமக்குத் தெரிவிக்குமாறும் கல்விச்சேவை சபைச் செயலாளர் கோரியுள்ளார்.

## 6 மாத சம்பளத்துடனான லீவு

கடந்த காலத்தில் காச நோய், தொழு நோய், புற்று நோய் போன்ற நோய்களுக்கு மாத்திரம் சம்பளத்துடனான லீவு வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது பொது நிர்வாக அமைச்சின் 32/93-ம் இலக்க 24-12-1993 - ம் திகதிய சுற்று நிருபத்தின் அடிப்படையில் வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யப்படும் எந்நோய்க்கும் 6 மாதங்களுக்கு அவருடைய அவ்வருட லீவிற்கு மேலாக சம்பளத்துடனான லீவு வழங்கலாம் என தமிழர் ஆசிரிய சங்க செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழு சமாதான நீதிவான்கள் புதிதாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக ஏழு சமாதான நீதிவான்கள் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நியமனம் தொடர்பாக நீதி அமைச்சின் செயலர் யாழ் செயலகத்திற்கு நியமிக்கப்பட்டோரின் பெயர் விபரங்களுடன் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த திங்கள் யாழ் செயலகத்திற்கு வந்துசேர்ந்த இக்கடிதத்தின்படி சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டோரின் விபரம்வருமாறு: ஆர்.ட.சுப்பிரமணியம் கொக்குவிலிற்கும் எஸ். கந்தசாமி சாவகச்சேரிக்கும், ரீ, அரியரட்ணம் கல்வியங்காட்டிற்கும், ஜீ. ஆறுமுகசாமி பருத்தித்துறைக்கும் சிதம்பரப்பிள்ளை சண்முகம் உடுப்பிட்டிக்கும், எஸ். எஸ். வரதராஜா யாழ்ப்பாணத்திற்கும், வி. இராசையா சுன்னாகத்திற்கும் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்,

இவர்களின் இந்நியமனம் தொடர்பாக முழுவிபரங்களும் நவம்பர் மாதம் 25ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது

(பா) (தி)

## பண்டிதர் குடியிருப்பில் மலேரியா தீவிரம்

கெற்பலிபண்டிதர்குடியிருப்பில் தற்போது மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது.

குடியிருப்பில் இயங்கும் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் நாளாந்தம் சிகிச்சை பெற வருவோரில் பெரும் பாலானோரிடையே மலேரியாக் காய்ச்சலே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இக் காய்ச்சலினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு சிலர் மருத்துவ நிலைய வாட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எத்தகைய சிகிச்சைகளை மேற்கொண்ட போதிலும் குடியிருப்பில் மலேரியாவை கட்டுப்படுத்த முடியாதிருப்பதாக வெள்ளிக்கிழமை தோறும் மருத்துவ சேவையினை மேற்கொள்ளும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வைத்திய அதிகாரி சு.சி. அருளானந்தம் தெரிவித்தார். (22)

## திருப்பலி

கோப்பாய் புனித மரியாள் ஆலய திருநாள் நவநாட்கள் நடைபெற்று வருகிறது. இன்று காலை 7மணிக்கு திருநாள் திருப்பலிஒப்பு கொடுக்கப்படும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-08**
**வியாழன் இரவு**

08.01 -சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10 -சித்த மருத்துவக் குறிப்புகள்
08.20 -உழைப்போம்உயர்வோம் நிகழ்ச்சியில் ''கரைசேரும் படகுகள்'' குறுநாடகம்.
08.30 -செய்திகள்
08.40 -ஏட்டிலிருந்து அயர்லாந்து 800 ஆண்டு விடுதலைப் போர் என்ற நூலிலிருந்து ''இன்றைய நிலைமை'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
08.50 -மலரும் மொட்டுக்கள்
09.00 -மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994-12-09**
**வெள்ளி காலை**

07.02 -மாவீரவணக்கம்
07.15 -மணியாரம்
07.30 -செய்திகள்
07.35 -பத்திரிகைச் செய்திகள்
07.40 -தாயகப்பாடல்கள்
08.00 -மணிக்குகாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# அரசைக் கவிழ்க்க சமூக விரோதிகள் சதியென சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமூக விரோத சக்திகள் தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்வதாக ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலையில் அரசாங்கம் மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் முன்பு பேசுகையில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டு சுயலாபம் தேடிக்கொண்ட சில சக்திகள் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்கச் சதி செய்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான வெளிநாட்டு முதலீடுகளை தடுப்பதிலும் வேறு வழிகளில் பொருளாதார முன்னேற்றத்தை சீர் குலைப்பதிலும் தேச விரோத சக்திகள் கவனம் செலுத்துகின்றன. இத்தகைய சமூக விரோத சக்திகளின் செயற்பாடு தொடர்பாக நாட்டு மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறுக்கு வழிகளில் லாபம் பெற்று வந்த சில சமூக விரோத சக்திகள் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக சதி செய்ய ஆரம்பித்துள்ளன. சமாதான முயற்சிகளையும் குழப்புவதற்கு இந்த சக்திகள் பிரயத்தனம் செய்கின்றன. சர்வதேச மோசடிக்காரர்கள் ஆயுத வியாபார முதலைகள், பாதாள உலகின் தலைவர்கள் ஆகியோர் இந்த நடவடிக்கைகளின் பின்னால் இருந்து அரசுக்கு எதிராக செயற்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்,

மாற்றம் நிகழும் இக்கால கட்டத்தில் விழிப்பாக இருந்து அரசாங்கத்தைப் பாதுகாப்பது தொழிற் சங்கங்களின் கடமை எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயகம் திடமாக பேணிப்பாதுகாக்கப்படும் எனவும் மக்கள் அச்சமின்றி பாதுகாப்பாக சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# துப்பாக்கி முனையில் 76 லட்சம் ரூபா வியாங்கொடையில் கொள்ளை

## பட்டப்பகலில் நடந்த சம்பவம்

(கொழும்பு)

வியாங்கொட பகுதியில் நேற்றுப் பகலில் துப்பாக்கி முனையில் 76 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது. வியாங்கொடையிலுள்ள வெயார் டெக்ஸ் நிறுவன ஊழியர்களின் சம்பள பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டிருக்கிறது.

தொழிற்சாலைக்கு செல்லும் பிரத்தியேக பாதையில் வாகனம் திருப்பப்பட்ட சமயம் மற்றொரு வாகனம் அதன் பயணத்தை தடை செய்யும் விதத்தில் செயற்பட்டதாகவும் அப்போது துப்பாக்கி ஏந்திய நபர்கள் இக்கொள்ளையை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தனாமாவத்தையிலுள்ள மக்கள்வங்கிக்கிளையிலிருந்து. தனியாருக்கு சொந்தமான பாதுகாப்பு வாகனமொன்றில் இச் சம்பளப்பணம் எடுத்துச் செல்லப்பட்டது. இக் கொள்ளைச் சப்பவம் தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. எனினும் பொலிசாரின் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

இடம்பெயர்ந்தோர் நிவாரணம்

# தொடர்ச்சியாக 6 வாரங்கள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் தொடர்ச்சியாக ஆறுவாரங்களுக்கு வழங்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் இறுதி இருவாரங்களில் இருந்து தொடர்ச்சியாக ஆறுவாரங்களுக்கான உலர் உணவுப் பொருட்களை வழங்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக இரண்டொரு தினங்களில் செப்ரெம்பர் மாதத்தின் இறுதி இருவாரங்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளது.

தற்சமயம் இதற்கான கொள்வனவுக் கட்டளைகளை புனர்வாழ்வுப் பகுதியினர் பல நோ, கூ.சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏனைய வாரங்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது. (பா)(தி)

### பாவனைக்குதவாத

தனையின்போது கண்டு பிடிக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் அப்பிள் பழங்களை அவ்விடத்திலிருந்து அகற்றவும் உடனடி நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

### ஜனாதிபதி

இதனால் எமது கோரிக்கையை தொழில்துறை அமைச்சர் சீ. வீ. குணரட்ன ஊடாக அனுப்பிவைத்தோம் எனவும் அவர் குறிப்பிட்டார்

இதன் பிறகு அமைச்சர் சீ. வீ. குணரட்னவுடன் நாம் பேசினோம். பூநகரிப் பாதை விவகாரம் பற்றியும்- அந்தப் பாதையை கிளிநொச்சி அரச அதிபரின் உதவியைப் பெற்று

### வவுனியா

தைய பொ. ஐ. முன்னணி அரசு சுவீகரிக்க முயற்சி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ.பா.தி.)

### விரைவில்

இந்திய தரப்பு குழுவுக்கும் முதலாவது உத்தியோக பூர்வ பேச்சுக்கள் நேற்று ஆரம்பித்தன-

# வினாத்தாள் வந்தது

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற க. பொ. த. (சா/தர) பரீட்சைக்கான மிகுதி அனைத்து வினாத்தாள்களும் நேற்று யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்தது.

கொழும்பில் இருந்து விமானமூலம் பலாலிக்கு எடு

செப்ரிசீமியா, மூளைக்காய்ச்சல்

# நோய்களின் தாக்கத்திற்கு நேற்று இருவர் பலி

செப்ரிசீமியா, மூளைக்காய்ச்சல் நோய்களினால் நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் இருவர் மரணமாகினர்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த மகாதேவன் இராமச்சந்திரன் (வயது47) என்பவர் செப்ரிசீமியா நோயினாலும், சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த கந்தசாமி அருள்தாஸ் (வயது 2 மாதங்கள்) என்னும் குழந்தைமூளைக்காய்ச்சல் நோயினாலும்மரணமாகியுள்ளனர்

### யுத்த

வித்துள்ளார்.

இதனை இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் கெமுனு குலதுங்காவும் உறுதிப்படுத்துமாப்போன்று பேசினார் அவர். யுத்த நிறுத்தம் தொடர்பாக இராணுவத்தினருக்கோ அல்லது ஏனைய படையினருக்கோ அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவித்தல் எதையும் தரவில்லை என்றார்.

பி.பி. சியின் சிங்கள சேவையான சந்தேசியவின் செய்தி

### பூநகரிப்

மக்கள் பாப்பரசரைச் சந்திப்பதற்கு வசதியாக பாதை ஒன்று தேவைப்படுகிறது என யாழ். ஆயர் குறிப்பிட்டபோது பூநகரிப்பாதையை திறக்கும் நோக்கம் எமக்கில்லை. கப்பலால்யாத்திரிகர்களை ஏற்றிச் செல்ல முடியும் என ஜெரி டி சில்வா குறிப்பிட்டார்

இந்த வேளை பல்லாயிரம் மக்களை கப்பலால் அழைத்துச் செல்வதில் பல சிரமங்கள் உண்டு. தவிர பலநாட்கள் பயணம் இடம்பெற வேண்டிய நிலை ஏற்படும் என யாழ். ஆயர் கருத்துத்

# சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் தாங்கியில் ஏறிய சிறுவன் கீழே விழுந்து காயமடைந்துள்ளார்.

இவர் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த சிவகுமாரன் பிரகாஸ் (வயது 5) என்பவரே காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்- (இ)

# விபத்தில் வயோதிபமாது காயம்

(யாழ்ப்பாணம்)

கடைக்குச் சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்த வயோதிப மாதுவை மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்தார்-

நல்லூரில் நேற்று நடைபெற்ற இச் சம்பவத்தின் போது சண்முகநாதக் குருக்கள் சாந்தாதேவி (வயது64) என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவார்- படுகாயத்திற்கு இலக்கான இவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்: (சி)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி வைத்திலிங்கம் இலட்சுமி அம்மாள்

வீரமாணிக்கதேவன் துறையை பிறப்பிடமாகவும் தற்போது சிவன் வீதி உரும்பிராய் கிழக்கில் வசித்து வருமான திருமதி வ. இலட்சுமி அம்மா நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவயோகநாதன், திருமதி புனிதக்கிளி, சண்முகநாதன் (மோகன்), அமரர் பரமநாதன் (சோதி- நாட்டுப்பற்றாளர்), அமரர் தங்கேஸ்வரன், வீரவேங்கை சஞ்சீவி, கப்டன் நெடுமாறன் ஆகியோரின் அன்புத்தாயாரும், லலிதா, அமரர் சிறிதரன், கமலேஸ்வரி, றூட்லலிதா, கௌரி (யாழ். பல்கலைக்கழக கணிதப் பிரிவு) ஆகியோரின் மாமியாரும், மகேசினி, வீரவேங்கை பதுமநிதி, கண்ணன், சுரதா, சுது, கபிலன், பிரசன்னா (கடற்புலிகள் - மகளிர்), நிரந்தரி (போராளி-புகைப்படப்பிரிவு), சஞ்சீவி (போராளி), நிசாந்தி, மாறன், வேணி, வத்சலா, தங்கா, லோகிதன், சுகந்தன், காயத்திரி, உமையவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். இவரது உடல் அன்னாரது விருப்பத்திற்கிணங்க யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றது. இன்று காலை 10-30 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரிடம் வைபவ ரீதியாக ஒப்படைக்கப்படும். இவ் அறிவித்தலை போராளிகள், மற்றும் மாவீரர் - போராளிகள் குடும்பங்கள் மற்றும் ஏனையோரும் ஏற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு

வ. மோகன்
(மகன்)

(சி-10870)

## மகாதேவாபத்தர் இராமச்சந்திரன்

மகாதேவாபத்தர் இராமச்சந்திரன் நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மகாதேவாபத்தர் முத்துலெட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும்,

ச. வ். குணரட்னவுடன் நாம் பேசினோம். பூநகரிப் பாதை விவகாரம் பற்றியும்- அந்தப் பாதையை கிளிநொச்சி அரச அதிபரின் உதவியைப் பெற்று பெருந்தெருக்கள் திணைக் களத்துடன் இணைந்து இப் பாதையை திறக்கலாம் எனவும் கூறினோம். இந்த விடயத்தில் நாம் கொஞ்ச அழுத்தத்தை கொடுத்து வருகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (தி, பா, இ)

**வரைவில்**

இந்திய தரப்பு குழுவுக்கும் முதலாவது உத்தியோக பூர்வ பேச்சுக்கள் நேற்று ஆரம்பித்தன-

இப் பேச்சுக்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியாவிற்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயம் தொடர்பாகவும், பொருளாதார ஒத்துழைப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

தாள்களும் நேற்று யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்தது.

கொழும்பில் இருந்து விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இவ் வினாத்தாள்கள் அங்கிருந்து கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களத்திற்கு நேற்றுமாலை வந்துசேர்ந்தது

(பா), (தி)

யோகபூர்வ அறிவித்தல் எதையும் தரவில்லை என்றார்.

பி.பி. சியின் சிங்கள சேவையான சந்தேசியவின் செய்தியாளரான எல்மோ பெர்ணான்டோ, யுத்தநிறுத்தம் தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா எனக் கேட்டபோதே பிரிகேடியர்கெமுனுகுலதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, யுத்த நிறுத்தம் குறித்து உயர்மட்டங்களில் பேசப்பட்டிருக்கலாம் ஆனால் எவ்வகையில் யுத்த நிறுத்தத்தை செயற்படுத்துவது? எப்போது செயற்படுத்துவது? எதுவரை நீடிப்பது? ஆகியவை பற்றி எதுவித அறிவித்தல்களும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தூச் செல்வதில் பல சிரமங்கள் உண்டு. தவிர பலநாட்கள் பயணம் இடம்பெற வேண்டிய நிலை ஏற்படும் என யாழ். ஆயர் கருத்துத் தெரிவித்தபோது இராணுவத் தளபதி அவற்றையெல்லாம் நாம் பார்ப்போம் எனவும் தெரிவித்தார்.

பூநகரிப் பாதை திறக்க முடியாது. அப்பாதை உடைந்து போயுள்ளது. அதைத் திறப்பதில் பெரும் சிரமங்கள் உண்டு. செலவுகள் அதிகம் உண்டு எனவும் இராணுவத் தளபதி அங்கு பிரஸ்தாபித்துள்ளார். (தி),(பா,)(இ)

**பேச்சுவார்த்தை**

னால் இது தொடரவும் கூடும் என கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளரும், அரசியல் விமர்சகருமான பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

---

உ

## வண்ணை சாந்தையர் மடம்

## ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்

# விநாயக சஷ்டி உற்சவமும்

## கயமுகா சூரன் போரும்

காலம்:- 08-12-94 வியாழக்கிழமை

நேரம்:- மு. ப. 8. 30 மணி முதல் நடைபெறும்.

| | |
|---|---|
| காலை 7.00 மணி காலைப் பூசை | பி. ப. 2.00 மணி மாலைப் பூசை |
| 8.30 மணி சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பம் | 2.30 மணி பிள்ளையார் கதைப் படிப்பு |
| 10.30 மணி சங்காபிஷேகம் | 4.00 மணி வசந்த மண்டப பூசை |
| 12.00 மணி நற்பகற் பூசை | |
| 12.30 மணி பஞ்சமுகார்ச்சனை | 4.30 மணி ஸ்ரீபஞ்சமுக விநாயகப் பெருமான் உற்சவம் (வெளி வீதி) |

### விசேட மங்கள இசை

1. வண்ணை க. ஜெகன் குழுவினர்

| | |
|---|---|
| 2. N. K. பத்மநாதன் | N.K. வீராச்சாமி |
| 3. V.K. பஞ்சமூர்த்தி | K. நித்தியானந்தம் |
| 4. S.S. சிதம்பரநாதன் | K. சிவகுமார் |
| 5. R. கேதீஸ்வரன் | T. உதயசங்கர் |
| 6. S. சிறிதரன் | R. பாஸ்கரன் |

(சி-10869) - உபயகாரர்

---

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

முன்னைநாள் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கால் நூற்றாண்டுக்கு மேலாக யாழ். இந்துக்கல்லூரியில் தாவரவியல், இரசாயனவியல் ஆசிரியராக அவர் ஆற்றிய பணிகளை யாழ் இந்துபழைய மாணவர்கள் என்றென்றும் நினைவு கூரக்கடமைப்பட்டவர்கள். அவரின் நற்பணி வாழ்வை நன்றிப்பெருக்குடன் நினைவு கூருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

செயலாளர்

யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்

யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1994-12-07

(சி-10864)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## மகாதேவாபத்தர் இராமச்சந்திரன்

மகாதேவாபத்தர் இராமச்சந்திரன் நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மகாதேவாபத்தர் முத்துலெட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், பட்டத்தியின் (ராகினி) கணவரும், மகாலெட்சுமி காலஞ்சென்ற தேவராஜ், ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நாகரத்தினம், இராமகிருஷ்ணன், இராமநாதன் (கோபால்), சண்முகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற இலாலசிங்கம், காசிப்பத்தர் ராஜேந்திரன், நாகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று (08-12-94) பிற்பகல் 4.00 மணியளவில் யாழ். கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
ம. சண்முகநாதன்
(சகோதரன்)

இல. 832,
கே. கே. எஸ். வீதி,
(தட்டாதெரு)
யாழ்ப்பாணம்.

(10329)

---

## பொன்னையா சிவசுப்பிரமணியம்

(Addl. Director General)
(Urban Development Authority)

அச்சுவேலியை பிறப்பிடமாக கொண்டவரும், கொழும்பில் வசித்துவந்தவருமாகிய திரு. பொன்னையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 6-12-94 காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், மகேஸ்வரி (ஆவரங்கால்), பாலசுப்பிரமணியம் (இங்கிலாந்து) லோகேஸ்வரன் (பத்தமேனி) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும், சிவானந்தன் (கனடா), தயானந்தன் (உசன், மிருசுவில்), றஞ்சிதமலர் (இங்கிலாந்து), விவேகானந்தன்(H. N. B.), ஆனந்தராணி (இந்தியா), காலஞ்சென்ற ஞானானந்தன் ஆகியோரின் அன்பு தந்தையும், சாந்தினி, அனுசூயா, கஜேந்திரன், மீனா, கதிரேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், உமா, தர்ஷிகா, அம்பிகா, உஷா, சியாமளி, தயாளன், ரேணுகா, கார்த்திக், கிருஷ்ணா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 25 c 8th Lane, Colombo-3 இலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
சி- தயானந்தன் (மகன்)

(10328)